
குளிர்கால ஒன்றுகூடல்
2011



தொழில் முயற்சியின் வெற்றிப்படிகள்....

தரமான வாகன திருத்த வேலைகளுக்கு...

IDEAL AUTO TECH

for all your quality vehicle service needs...

Timing Belt Package

HONDA ACCORD
OR
TOYOTA CAMRY

Water Pump, Timing Belt, Cam Seal, Crank Seal, Oil Pump, Belt Tensioner, Belt Roller

only **$400**

- Alternator
- body work
- Breaks
- Drive Shaft
- Fuel Pump
- muffler
- Power Steering
- Safety Check
- Shocks Absorber
- Starter Motor
- Wheel Alignment
- Oil Change

and more...

புதிய இடத்தில், புதுப் பொலிவுடன்...

அனைத்து வாகனங்களையும் நவீன
உபகரணங்களின் உதவியுடன் தரத்துடனும்,
உத்தரவாதத்துடனும் திருத்திக்கொள்ள...

Break

including Parts & Labour

$89.99

Offer valid only with this coupon
Offer valid on most vehicles.
code: tamNew070110

'ஐடியல் ஆட்டோ ரெக்'
416 752 5823



Tel: (416) 752-LUBE (5823)

Wheel Alignment

$49.99

Offer valid only with this coupon
code: tamNew070110

Oil Change

$19.99

Offer valid only with this coupon
code: tamNew070110

1600 Midland Ave., Scarborough, ON M1P 3C2
(*between* Lawrence & Ellesmere)

மயிலிட்டி மக்கள் ஒன்றியம்

Myliddy People's Association

ஏழாவது ஆண்டு

www.myliddy.ca

myliddy@live.ca

மார்கழி 26, 2011

தமிழ்த்தாய் வாழ்த்து!

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே
வானமளந் தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே
வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழி
வானம் அறிந்தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

கனடா கீதம்!

ஓ கனடா! எங்கள் வீடும் நாடும் நீ!
உந்தன் மைந்தர்கள்
உண்மைத் தேச பக்தர்கள்!
நேரிய வடக்காய், வலுவாய், இயல்பாய்
நின் எழில் கண்டு உவப்போம்!
எங்கும் உள்ள நாம், ஓ கனடா
நினைப் போற்றி அணிவகுத்தோம்!
எம் நிலப் புகழைச் சுதந்திரத்தை
என்றும் இறைவன் காத்திடுக!

ஓ கனடா நாம் நினைப் போற்றி
அணிவகுத்தோம்!

ஓ கனடா! நாம் நினைப் போற்றி
அணிவகுத்தோம்!





குளிர்கால ஒன்று கூடல் மலர் வெளியீடுக்கான வாழ்த்துச்செய்தி

வளம்மிக்க வங்கக்கடலின் வளம் செழிக்கும் கரையிலே பிறந்து வளமுடன் வாழ்ந்த மயிலை நகர்ப்பதியின் அன்புள்ளங் கொண்ட என் இனிய உறவுகளே!

எமது மண்ணை மறவாது நினைவு கூரும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் வரும் குளிர்காலத்தில் பெருமையோடு ஒன்று கூடியிருக்கும் என் உடன் பிறப்புகளுக்கு அனுப்பி வைக்கும் வாழ்த்துச்செய்தி.

கல்வியிலும் கலை கலாச்சாரத்திலும் மெய்வன்மைக் கழகத்திலும் முன்னிலை பெற்றதோடன்றி திரைகடலோடி திரவியம் தேடி வழம்பல கண்ட எம்மண்ணை விட்டு விரட்டப்பட்டு 21 ஆண்டுடன் 6 மாதங்களாகியது கனவான கதையாகிவிட்டது.

பெற்றோர் ஓரிடமும் பிள்ளைகள் ஓரிடமும் எண்ணமுடியாத மைல்களுக்கப்பால் இன்னோரிடத்திலும் இருந்து தொலைத்துவிட்ட வாழ்வைத்தேடிக் கொண்டிருக்கின்றோம்.புலம்பெயர் வாழ் உறவுகள் என்ற பேரில் நீங்களும்,இடமுமிழந்து மறுக்கப்பட்ட உரிமைதேடி, அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும் நாமும் ஒருவரையொருவர் நீர்த்திரை நிறைந்த விழிகளினூடே பார்த்து இந்நாளை ஓர் பொன்னாளாக எண்ணி மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

மீண்டும் பிறந்த மண்ணில் வாழ்வு காண இங்கே ஏக்கத்துடன் ஒன்று கூடி விடிவுகாலம் வரும் நாளை நோக்கிப்பல பயணங்கள் மேற்கொண்டும் பலனேதும் யாமறியோம்.

பார்ப்போரெல்லாம் எம்மைப் பரிவுடன் பார்க்கும் போதும், எம்மைப் பார்த்துப் பரிதாபப்படும் போதும் நாம் படும் வேதனை சொல்லும் தரமன்று. எம் மண்ணில் நாம் கால் பதிக்கும் நாள் வரும் கால் உங்கள் உறவுக்காகக் கைகொடுக்கும் நாளை எண்ணிக் கழித்திடுங்கள்.

நன்றியுடன் விடைபெறும் உங்கள் இரத்தத்தின் ஓர் துளியான,

சின்னையா தவரெட்ணம்,
சமாதான நீதவான்
தலைவர் - யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனம்
தலைவர் - வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டமைப்பு.


ரவி வீடியோ
416 292 2922
416 816 RAVI(7284)
1984 முதல் வடமராட்சியில்
காலத்தின் தேவைகளுக்கேற்ப புதிய நவீன
Digital,Professional editing
உத்திகளுடன் இன்று கனடாவில்..........
RAVI VIDEO

வாழ்த்துச் செய்தி



வல்லிபுரம் ஆனந்தலிங்கம்
கோண்வோல் ஒன்ராறியோ.

என் அன்புக்கு பாத்திரமான மயிலிட்டி வாழ் உறவுகளே!


"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு"

எமது பனிகால ஒன்று கூடல் 2011 நிகழ்வுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். நம் நாட்டில் நடந்து வந்த அனர்த்தங்களின் விளைவுகளால் புலம் பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்தாலும், நாம் பிறந்த மண்ணையும், எங்கள் பாரம்பரிய கலாச்சாரத்தையும் கடைப்பிடிப்பதற்காக உருவாக்கப்பட்ட எமது மயிலிட்டி மக்கள் சங்கத்தில் நானும் அங்கம் வகிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது சங்கம் ஈழத்தில் வாழும் எம்மவருக்கு ஆற்றிவரும் பணிகளும், கனடாவில் வாழும் எம் இளம் சந்ததியினருக்கு எமது மண்ணின் பாரம்பரியங்களையும், கலாச்சார விழுமியங்களையும் பெருக்க ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன. இப்பணி மென்மேலும் தொடர எல்லாம் வல்ல அரசடிப்பிள்ளையாரின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

"செயல் பெரிதோ, அன்றிச் சிறிதோ
தம்மால் செய்யக்கூடியவற்றைச் சலிப்பின்றிச்
செய்யக்கூடியவரே போற்றுதற்குரியவராகிறார்"

நன்றி


THE ROAD TO SUCCESS STARTS WITH
SEGARAM&SONS
AIRBRAKE TRAINING
Z - ENDORSEMENT & ADJUSTMENT
OSL Course Provider
Ontario
Ministry of Transportation
APPROVED
SEGARAM SITTAMPALAM
CERTIFIED INSTRUCTOR & SIGNING AUTHORITY
CLASSES ARE AVAILABLE ON WEEKENDS
ADDITIONAL COURSES AVAILABLE
> School Bus Driver Improvement Course (SBDIC - MTO Approved)
> Defensive Driving (PDIC/DDC - Canada Safety Council)
> Transportation of Dangerous Goods
> Hours of Service (Log Book)
FOR MORE INFORMATION CALL:
(416) 801.7458
LOCATION
LOAD X LOGISTICS
7050 BRAMALEA ROAD, # 21
MISSISSAUGA, ONTARIO L5S 1T1 CANADA

தலைவர் உரை

கனடாவாழ் மயிலிட்டி மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியினால் வழமைபோல இம்முறையும் குளிர்கால ஒன்றுகூடல் இன்று ஏழாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் வேளையில், எனது அன்பிற்கும், பண்பிற்கும் மதிப்பிற்குமுரிய மயிலிட்டி மக்களுக்கு எனது மனம் நிறைந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதுவரை காலமும் மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தினை முன்னேற்றப் பாதையில் வளர்த்து வந்த நிர்வாகக்குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும், அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வேண்டிய உதவிகளைச் செய்த மக்களுக்கும் எனது நன்றிகள்.

வழமைபோல் இந்த வருடமும் தாய் மண்ணில் அல்லலுறும் மக்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை உங்கள் துணையுடன் செய்து கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த வருடமும் பண உதவிமட்டுமல்லாது தொழில் முயற்சிக்கு வேண்டிய உதவிகளையும் செய்து கொண்டிருக்கின்றோம். இது தொடர்ந்து செய்ய வேண்டியதென்று என்று நாங்கள் உங்கள் உதவும் கரங்களை மிகவும் பணிவன்புடன வேண்டுகின்றோம். இந்த வருடம் கோடைகால ஒன்று கூடல் மிகவும் சிறப்பாக நடைபெற்றதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவதோடு விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சிறப்பித்தோருக்கும் மற்றும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சிறப்பித்தோருக்கும் வேண்டிய உதவிகளைச் செய்த அனைவருக்கும் மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போதுள்ள நிர்வாகக்குழு, செயற்குழு உறுப்பினர்களின் கடமை உணர்ச்சி, விடாமுயற்சி, செயல்திறன், பரிந்துணர்வு என்பனவற்றையிட்டு என்னால் புகழாமல் இருக்க முடியவில்லை. மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இதேபோல் இனிவரும் காலங்களிலும் இருக்க வேண்டும் என்று முன்கூட்டியே பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன். மிக முக்கியமாக நிர்வாகக்குழு, செயற்குழு உறுப்பினர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் எனது நன்றியைக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.


மயிலிட்டி மக்கள் ஒன்று சேரவேண்டும், ஒற்றுமையாக இருக்க வேண்டும் என சில உள்ளங்கள் இலைமறை காயாக இருந்து ஆற்றிவரும் சேவையை என்னால் மறக்க முடியாததொன்றாகும்.உங்கள் சேவை தொடரட்டும். உங்களுக்கு மயிலிட்டி மக்கள் ஒன்றியம் சார்பாக எனது இதயம் கலந்த நன்றிகள்.

அடுத்து இளையோர் நிர்வாகத்துறையில் பணியாற்றுவதற்கு முன்வரவேண்டுமென்று அவர்களிடமும், இதற்கு இவர்களது பெற்றோர் அனுமதியளித்து ஊக்கமளிக்க வேண்டுமெனவும் மிக மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.


தாயகப் பொறுப்பாளர்களான திரு.நா.வடிவேஸ்வரன், திர.சி.ஜோர்ஜ், திரு.ந.இளங்குமரன், திரு.சி.ஆனந்தசிங்கம் அவர்களுக்கும் மயிலிட்டி மக்கள் ஒன்றியம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அங்குள்ள சூழலிலும் பல சிரமங்களின் மத்தியில் பல்வேறு இடங்களுக்குச் சென்று எம்மக்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து கொண்டிருப்பவர்களை எப்போதும் எம்மால் மறக்கமுடியாது. அவர்களின் உதவி தொடர வேண்டுமென்று மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.


இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் குளிர்கால ஒன்றுகூடலை சிறப்பித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் மயிலிட்டி மக்கள் ஒன்றியம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு எதிர்வரும் ஆண்டு (2012) பங்குனி மாதம் நடைபெறவிருக்கும் பொதுக் கூட்டத்திற்குச் சமூகமளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் இங்கு ஒன்று பட்டால் அங்கள்ளவர்கள் உண்டு வாழ்வர்.



திரு.சிற்றம்பலம் சிவஞானசேகரம்
தலைவர்,
மயிலிட்டி மக்கள் ஒன்றியம்


BALA SELVAM
FOREIGN EXCHANGE INC.
&
JEWELLERS
BEST WISHES
MONEYTRANSFER
2480 Eglinton Ave East
Toronto, ON
M1K 2R4
Tel: 416.264.4000



செயலாளரிடமிருந்து.......

அன்பார்ந்த எம் உறவுகளே,

உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்.

இன்னும் சில தினங்களில் எமது சங்கம் ஏழாம் ஆண்டை நிறைவுசெய்து எட்டாம் ஆண்டில் காலடி பதிக்கப்போகிறது.

உங்கள் உதவியும்,ஆதரவும் எமக்கு தொடர்ந்து கிடைத்ததால்தான், நாம் பல தடைகளைத்தாண்டி தொடர்ந்து பயணிக்க முடிந்தது. உங்கள் ஆதரவுக்கு மனப்பூர்வமாக நன்றி கூறிக்கொள்ளும் இவ்வேளையில் தொடர்ந்தும் உங்கள் ஆதரவை சங்கத்திற்கு வழங்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு பல புதிய உறுப்பினர்கள் எம்மோடு இணைந்திருப்பது எமக்கு புத்துணர்ச்சியை அளிக்கிறது. அவர்கள் எம்மோடு இணைவதற்கு நற்சிந்தனையோடு செயற்பட்ட திரு.வில்சன் மற்றும் திரு.சத்தியசீலன் ஆகியோருக்கு எம் நன்றிகள் உரித்தாகுக.

21 வருடங்களுக்கு மேலாக மயிலிட்டியில் வாழ்வதற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம் உறவுகள், தாங்கள் வாழும் நாடுகள் தோறும் சங்கம் அமைத்து எமது மக்களுக்கு உதவியும் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

இந்த வரிசையில் கனடா, லண்டன், நோர்வே, பிரான்ஸ், இணைந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும்.

இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இங்கு கூடியிருக்கும் உங்கள் உறவுகளுடன் பேசி உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ளத் தவறிவிடாதீர்கள். எங்கள் உறவுகளுக்கு நீங்கள் புரிந்துவரும் உதவிகளுக்கு மீண்டும், மீண்டும் எம மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டு நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

தம்பிராஜா ஜெயசீலன்,
செயலாளர்,
மயிலிட்டி மக்கள் ஒன்றியம்.

CHOLA CATERER'S

எந்த வைபவமானாலும்
தரமான பொருட்களைக் கொண்டு
அறுசுவை உணவுகளை
உங்கள் இல்லத்திற்கே
கொண்டு வந்து தருகின்றோம்

We do cater all kind of occasions







Call: Gobi
Tel: 416 288-9339

1217 Ellesmere Rd
Scarborough, ON
(Midland & Ellesmere)
M1P 2Y3



பொருளாளரிடமிருந்து..........

மயிலிட்டி மக்கள் ஒன்றியத்தின் ஏழாவது குளிர்கால ஒன்றுகூடலில் குழுமியிருக்கும் எம் உறவுகளே! உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்கள்.

எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு வருடங்களுக்கு மேலாக எம் தாயாக உறவுகளுக்கான உதவிகளை இடைவிடாது செய்த வண்ணம் உள்ளோம். அந்த வரிசையில் இந்த வருடம் ஆடிமாதம் 11 குடும்பங்களும்,காாத்திகை மாதம் 10 குடும்பங்களும் எமது தொழில் முயற்சித்திட்டத்தில் பயன்பெற்றனர்.மேலும் தொழில் செய்ய இயலாத வயோதிபர்களில் 7 பேருக்கு தலா 10,000 ரூபாய்கள் வழங்கப்பட்டன.

நாம் ஒன்றுபட்டு இயங்குவதால்தான் இவ்வாறான உதவிகளை தொடர்ந்து எம் உறவுகளுக்கு செய்யக்கூடியதாக உள்ளது. இந்த வருடம் இரண்டு கட்டங்களாக மொத்தமாக $4200.00 களை எம் உறவுகளுக்கு அனுப்பி வைத்தோம்.இது தவிர வருட ஆரம்பத்தில் $500.00களை தாயகத்தில் இடம்பெயர்ந்து வாழும் எம் மக்கள் ஒன்றுகூடி மயிலிட்டி ஆலயங்களுக்கு சென்று சிறப்புத்திருவிழாக்கள் செய்வதற்காக அனுப்பி வைத்தோம்.

இந்த உதவிகளை தங்குதடையின்றிச்செய்வதற்கு ஒன்றுபட்டு உதவிய உங்கள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியை தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி.

சண்முகநாதன் சுகேந்திரன்
பொருளாளர்
மயிலிட்டி மக்கள் ஒன்றியம்.



Myliddy - A Soccer Town of Jaffna District

Sri Lanka is well-known for its cricket mighty; But soccer has its own root all over the island especially in the northern part of the nation. There are hundreds of clubs playing soccer at different levels in this part of the country especially in Jaffna District. As a dominant district in education and business of Sri Lanka, Jaffna has another popular culture to boast about: that is its century old soccer tradition. People in Jaffna started playing this popular sport of the world in the early nineteen hundreds. In the early stages of soccer, there were only few towns of this wonderful district played the sport: Myliddy was one of them.

Our fathers started playing this sport in the early fifties. Soccer was introduced to myliddy by the students of Myliddy who studied at the colleges located outside of our town. Though football was brought to Myliddy by those students, soon Myliddy started producing first class soccer players and supplied them to the colleges from where the sport came there. Players from Myliddy dominated the soccer teams of colleges such as Nadeswara, Mahajana, Union, and St.Henris. Especially, Mahajana Collage of Tellippalai won the championship trophy five times when its soccer teams were led by the proud sons of Myliddy: They are Mr.Jegatheeswaran, Mr.Vadiveswaran, Mr.Tharmagulasingam, Mr.Kamalasingam, and Mr.Yogasingam.

When it comes to club soccer, Myliddy had three successful soccer clubs one after the other. The first of such club was named the Library Club of Myliddy: This club operated in the late fifties and early sixties. During this time, as I mentioned, soccer was introduced to Myliddy by the students. Talented players from all parts of Myliddy participated in this team and played friendly matches and soccer tournaments in the neighbouring towns. This club had one of the best players of Myliddy - Mr.Vijayaratnam. The second club "Blue Stars" was formed by Mr.Velnayagam in mid sixties. By then, Myliddy was producing some of the best soccer players like Mr.Vadiveswaran, Mr.Jegatheeswaran, Mr.Someswaranantham, and Mr.Thevalingam etc... In the mater of fifteen years since the introduction of soccer, Myliddy was able to send three players to the district team of Jaffna: Mr.Vadiveswaran, Mr.Someswaranantham, and Mr.Thevalingam. As one of the key players of the team, Mr.Vadiveswaran led the soccer team of Jaffna District. And eventually, was selected to the national soccer team of Sri Lanka and played against the national teams of Malaysia and Singapore. The last and the best soccer team of Myliddy is Kannaki Sports Club. Formed in late sixties, Kannaki enjoyed tremendous success in the late sixties, seventies, and eighties. During this time, soccer was in its prime form in Myliddy. Hundreds of games played and many of them were won by Kannaki. The soccer legends of Jaffna District were defeated by the players of Kannaki in many games. Playing against Kannaki was a challenge in those days, and winning those games were nightmare to many soccer clubs and their star players back then.

However, things changed when we were forced to move out of Myliddy in 1990. Following the displacement of the people of Myliddy, Kannaki suspended its operation for two years. But some enthusiastic players and well-wishers reorganized the club and played soccer matches in Vadamarachchi until 1995. But the unfortunate move of the people of myliddy from Vadamarachchi to vanni stopped the operation of Kannaki in our homeland.

Yet, the overseas operation of Myliddy Kannaki is still very active in London, England. For the last fifteen years, Kannaki has been competing in soccer tournaments in London and has won the championship trophies several times. Furthermore, the people of Myliddy living in London have just formed another soccer club called Myliddy Sports Club in order to boost the game within our community.

As a community we enjoyed a lot of success playing soccer in our homeland due to the tremendous support given by the people of Myliddy to the teams and the players. Therefore, it is time for us to get together again and form good soccer teams with talented young players of Myliddy and lead those teams to success and glory as our fathers did in Myliddy. We wish all success to those soccer clubs of Myliddy, their players and their supporters!
Written By,

S.Shanmugarajah (Sasi)

விதைமண்ணிலிருந்து பேசும் ஆன்மாக்கள்

கிளறியெறியப்பட்டு கொட்டப்பட்டிருக்கிற
விதைகுழி மண்ணுக்குள்ளிருந்து
கனவு சுமக்கும் ஆன்மாக்கள்
தம்மை நேசிக்கிற உங்களுக்காக
எழுதுகின்ற கவிதை இது.
உக்கிப்போன எமது சீருடைத்துணியின்
துண்டுகளும்...
இன்னும் மக்காமலிருக்கின்ற
எமது எலும்புகளின்
உடைந்த வெண்துண்டுகளும் மட்டுமே
இப்போது எமதின் அடையாளமாய்
எம்மருகில் மிச்சமிருக்கின்றன.
உடைக்கப்பட்டுக் குவிக்கப்பட்டிருக்கிற
கல்லறைக் கற்குவியல்களுக்குள்
வெடிப்புண்டு வெளிறியிருக்கின்றன
எமது ஏனைய நினைவுத் துக்கள்.

நீங்கள்
தனித்தனியே விதைத்து வைத்த
எம் வித்துடல்களை கிளறியெறிந்து
மீண்டுமெப் ஆன்மாக்களை
மண்கும்பியாக்கி ஒன்று சேர்த்துவைத்திருக்கிறார்கள்
நம்மை வெறுப்பவர்கள்.
எமது மூச்சுக்களில் நிறைந்திருக்கும்
நமது கனவுகள்
மண்களினடியில் ஆழமாய் கிறிங்குகின்றன.
நீங்கள்
எமக்காய் அன்று கொழுத்திவைத்த
சந்தனம் ஊதுபத்திகை வாசங்களும்
தூவிவிட்ட பூக்களின் நறுமணங்களும்
இன்னும்
நிறைந்திருக்கின்றன நம் மண்ணில்.
எம்மையும்
எமது விருப்பங்களையும் சேர்த்து
நெஞ்சில் சுமக்கும் சொந்தங்களே!
கட்டியெழுப்புங்கள்.

எமது கல்லறைகளை அல்ல.
நமது கனவுகளை.
விளக்கேற்றுங்கள்.
எமது விதைகுழிகளில் அல்ல.
எமது பெயரால் உமது மனதுகளில்
ஆண்டுக்கொரு மரம் நடுங்கள்
உங்கள் வீட்டின் ஏதொவொரு ஓரத்தில்.
அதிலசையும் ஈரக்காற்றோடு
நாமும் உயிர்தொடுவோம்.
கார்த்திகை மாதத் திருநாளில்
எமை நினைத்துருகி
கண்மழை பொழியுமெம்
மண்மடி உறவுகளே!
எங்கள் யாவருக்குமாய்
நாமெம் இளமைகளை தொலைத்தோம்.
உறவு துறந்த பிரிவு சுமந்தோம்.
வலி தாங்கித் தாங்கி வாழ்ந்தோம்.
தேசமதில் வீரவடுப் பட்டோம்.
பின்னொரு நாளில்

நிறைவேறாத இலட்சியங்களோடு
எதிர்பாராத தருணங்களில்
ஒன்றன் பின் ஒன்றாய்
விதைகளாகிப் புதைந்தோம்.
எம் பிரிவின்
வலி சொல்லிச் சொல்லியழும்
ஈரமிகு நெஞ்சுகளே!
எமை தெரியாமலேயே
எமக்காய் கைகூப்பித் தொழும்
வீரமிகு பிஞ்சுகளே!
வாழுங்கள்.

எங்களுக்காய் வாழுங்கள்.
எமது கனவுகளுக்காய் போரிடுங்கள்.
நாம் கேட்கும் நீதிச் சுதந்திரம் பற்றி
தொடர்ந்து சொல்லுங்கள்.
எமக்கு இளைக்கப்பட்ட அநீதிகளை
மறுக்கப்படும் உரிமைகளை
சத்தமாக உரத்துக் கூறுங்கள்.
எமை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு
எங்களில் ஒருவராய்
நீங்கள் இருக்கிறீர்கள் எனும்
நம்பிக்கை கொடுங்கள்.
காலச்சறுக்கலில் சிறைப்பட்டுப் போன
எம் தோழர்களை
அங்கிருந்து வெளியே மீட்டெடுங்கள்.
மீண்டுவந்த காயப்பட்ட மனதுகளுக்கு
கருணை காட்டுங்கள்.
கை தூக்கி உயர்த்தி விடுங்கள்.

உறுப்பிழந்த உறவுகளுக்கு
ஊன்றுகோல்களாகி உதவுங்கள்.
இருள்சுமக்கும் நிலவுகளுக்கு
வாழ வழி காட்டுங்கள்.
யாரும் கேட்காமலேயே
ஒளிதரும் மின்மினியாய்
தேடிப்போய் வெளிச்சம் கொடுங்கள்.
ஆதரவற்றுப் போன தனிமரங்களுக்கு
நிழல் கொடுத்து அரவணையுங்கள்.
ஒற்றுமையாய் இருங்கள்.
எங்களின் பெயரால் ஒற்றுமையாயிருங்கள்.
எல்லாவற்றுக்கும் மேலாய்
உங்கள் குழந்தைகளுக்கு
எம் தேசவரலாறு சொல்லிக்கொடுங்கள்.
எங்கெங்கு வாழ்ந்தாலும்
எம் தமிழ்மொழியை
கற்பித்துக் கொடுங்கள்.

நம்
தமிழை ...
தாய் நிலத்தை ...
பண்பாட்டை ...
எப்போதும் நேசிக்க கற்றுக் கொடுங்கள்.
நாமென்றும்
உங்களோடே இருப்போம்.
எங்கள் எல்லா சந்ததிகளோடும்.

தொழில் முயற்சியில் எமது உறவுகள்












குளிர்கால ஒன்றுகூடல் நிகழ்வின் மறக்கமுடியாத சில கணங்கள்

















நிகழ்ச்சி நிரல்

மங்களவிளக்கேற்றல்	
அமைதி வணக்கம்	
கனேடிய தேசிய கீதம்	
தமிழ் தாய் வாழ்த்து	
வரவேற்புரை	திருமதி. மோகனா விஜயரஞ்சன்
திருக்குறள்	செல்வி. அபூர்னா மயிலழகன்
வரவேற்பு நடனம்	செல்வி. சங்கவி தேவதாசன்
தலைவர் உரை	திரு. சிற்றம்பலம் சிவஞானசேகரம்
பாடல்	செல்வன். மிரேன் விஜயரஞ்சன்
திரை இசை நடனம்	செல்லி. காவியா ஜெயபாலன்
	செல்வன். கவிதன் ஜெயபாலன்
	செல்வன். பவீஷன் விஜயன்
	செல்வன். சங்கீதன் தேவதாசன்
தமிழ்ப் பேச்சு	செல்வி. மிதுர்னா மயிலழகன்
பாடல்	செல்வன். பிரிதிவி யோகரட்ணம்
திரை இசை நடனம்	செல்வி. பானுஷா விஜயன்
	செல்வன். அபரன் ஜெயபாலன்
பாடல்	திரு. செல்வம் கார்த்திகேசு
திரை இசை நடனம்	திரு. உதயகுமார் பரஞ்சோதி
திரை இசை நடனம்	செல்வன். பவித்திரன் விஜயன்
	செல்வன். நிரோஷன் சிவஞானசேகரம்
இராப்போசனம்	
திரை இசை நடனம்	செல்வன். பிராஜாபன் சிவசோதி
	செல்வன். சங்கமன் தேவதாசன்
	செல்வன். மருகன் சிவசோதி
	செல்வன். அபரன் ஜெயபாலன்
திரை இசை பாடல்	செல்வி. அபிஷேகா யோகரட்ணம்
கீபோட்	செல்வி. மிதுர்னா மயிலழகன்
நடனம்	செல்வி. தரணி இலஷ்மவாசன்
திரை இசை நடனம்	செல்வி. சங்கவி தேவதாசன்
	செல்வி. உமாநந்தினி சண்முகராஜா
	செல்வன். சங்கமன் தேவதாசன்
வாய்ப்பாட்டு	செல்வி. சாயிபிருந்தா அருந்தவசண்முகநாதன்
கீபோட்	செல்வன். நிரோஷன் சிவஞானசேகரம்
நடனம்	செல்வி. உமாநந்தினி சண்முகராஜா
நன்றியுரை	திரு. சண்முகராஜா சண்முகலிங்கம்
விருது வழங்கல்	
அதிஷ்ட்டப் பரிசிலுக்கான குலுக்கல்	

மயிலிட்டி மக்கள் ஒன்றியம் - கனடா
Myliddy People's Association - Canada

நிர்வாகக்குழு - 2011



தலைவர்: திரு. சி. சிவஞானசேகரம்
உபதலைவர்: திரு. செ. தேவதாசன்
செயலாளர்: திரு. த. ஜெயசீலன்
உபசெயலாளர்: செல்வி. வை. வையந்தலஷ்மி
பொருளாளர்: திரு. ச. சுகேந்திரன்

நிர்வாகக்குழு உறுப்பினர்கள்:
திரு. த. சத்தியசீலன்
திரு. ச. சண்முகராசா
திருமதி. வி. மோகனா
திரு. த. குணசீலன்
திரு. செ. விஜயன்
திரு. கு. சிவசோதி
திரு. அ. ஜெயபாலன்

புதிதாக இணைக்கப்பட்டவர்கள்:
திரு. வி. விஜயராஜா
திரு. சி. தங்கலிங்கம்
திரு. பா. பாலகணேஸ்
திரு. ரா. ரதீஸ்வரன்

மொன்றியலில் சேவையாற்றுவோர்:
திரு. வ. ஆனந்தலிங்கம்
திரு. ச. தவச்சந்திரன்

தாயகத்திலிருந்து உதவிசெய்வோர்:
திரு. நா. வடிவேஸ்வரன்
திரு. சி. ஜோச்
திரு. ந. இளங்குமரன்
திரு. சி. ஆனந்தசிங்கம்


உங்கள் நாவிற்கு ஓர் விருந்து!
NECTO
NECTO
NECTO
ORANGE
CREAM
Call: BALA (416) 879 - 1394

கோடைகால ஒன்றுகூடல் நிகழ்வின்போது










அந்தநாள் ஞாபகம் வந்ததே!





முருகையன் ஆலய முன்புறத்தோற்றம்.













கண்ணகியின் தீர்த்தோற்சவம்



உலகம் அழித்த அவலக் குறியீடு

முள்ளிவாய்க்கால்

விடிந்தால் மடிவோமா?
இல்லை
மடிந்தால் விடியுமா? யென
மரண அச்சத்தின் மிச்சமாய் நின்ற
மக்கள் வெள்ளம்...

காட்டிக் கொடுத்த தமிழனின் வினையால்
காட்டிய இடத்திற்கு வந்தான் தமிழன்
கூடிய இடத்தில் வீழ்வான் தமிழன் யென
ராஜ பட்சிகள் மாமிசம் தின்ன
வட்டமடித்த சூட்சம இடம்....

கோடி செலவுகள் செய்து தயாரித்த
உயிர்கொல்லி ஆயுதம் உதவுமாயென்று
வல்லரசு நாடுகள் அள்ளிக் கொடுக்க...
பதிலுக்கு கருகிய எம் மக்களை வாரிகொடுத்த
தமிழனுக்கு வேதனைக் கூடம்...
சைனாவுக்கோ சோதனைக் கூடம்..

தடை செய்யப்பட்ட ஆயுதத்திற்கு
அங்கு தடைகள் இல்லை
தமிழனை அழிப்பதே அவர்களின்
தலையாய கொள்கை....

போர் மரபு கூறிய முதியோர், சிறியோர்?
போர் மரபு மீறிய குற்றுயிர் மரணம்
கண்டும் காணாத ஐநா சாசனம்
கட்டிக் காத்து
காட்டி கொடுத்தது இந்திய சீதனம்

ஆயிரக்கணக்கில்
மக்களைக் கொன்று
அழித்தொழித்த
முள்ளிவாய்க்காலில்
பெறுக்கெடுத்த மனிதரெத்தம்
உலகத்தமிழர் நெஞ்சில் பாய்ந்து
வளர்த்தெடுக்குது தமிழீழத்தை...



நா. வடிவேஸ்வரன்,
லட்ஸ்மணன்தோட்டம்,
தும்பளை,
பருத்தித்துறை.
03-12-2011

கனடா வாழ் மயிலிட்டி மக்கள் ஒன்றியம்,
கனடா.

நிர்வாக உத்தியோகத்தர்கள் அவர்கட்கு,

மக்களின் தேவைகளை இனங்கண்டு சிறந்த முறையில் சேவையாற்றும் கனடாவாழ் மயிலிட்டி மக்களுக்கும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு,

கடந்த 8 வருடங்களாக தொடர்ந்து உயிர் காத்த மைந்தர்கள் அனர்த்த காலத்தில் சிறந்த சேவையாற்றிய எமது உறவுகளே, இடம் பெயர்ந்து புலம்பெயர் நாடுகளில் இருந்தாலும் எங்கள் உறவுகளை நல்ல நிலைக்கு கொண்டு வருகிறீர்கள். அவர்கள் நன்றி உணர்வுடன் இருக்கிறார்கள்.

எமது சொந்த ஊருக்கு வெகுவிரைவில் செல்லக்கூடிய அறிகுறிகள் தெளிவாகத் தென்படுகின்றது. எனவே இனிவரும் காலங்களில் சொந்த ஊரில் வளர்ந்து வரும் சிறார்களின் கல்வி வளர்ச்சிக்கும் விளையாட்டுத் துறைக்கும், தேவையான வேறு விடயங்களிலும் உங்களுடைய பங்களிப்பும் ஊக்குவிப்பும் கூடுதலாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். மீண்டும் மீண்டும் கனடாவாழ் மயிலிட்டி மக்களுக்கும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் எமது மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

நா. வடிவேஸ்வரன்	சி. ஜோஜ்	ந. இளங்குமரன்	சி. ஆனந்தசிங்கம்.

தாயகத்தில் இன்னலுறும் மயிலிட்டி மக்களுக்கு ஆண்டு 2011-ல் அன்புக்கரம் நீட்டி ஆதரித்துக் கொண்டிருக்கும் அன்புள்ளங்கள் சில...		
இலக்கம்	**பெயர்**	**மாதாந்த நன்கொடை**
1	திரு. வையாபுரி பாலசுப்பிரமணியம்	$300.00
2	திருமதி. தெய்வானை இராசையா	$200.00
3	திருமதி. சோமேஸ்வரியம்மா தம்பிராஜா	$200.00
4	திரு. தம்பிராஜா குணசீலன்	$200.00
5	திரு. சண்முகலிங்கம் சண்முகராஜா	$200.00
6	செல்வி. வையந்தலக்சுமி வையாபுரி	$200.00
7	திரு. தம்பிராஜா சத்தியசீலன்	$200.00
8	செல்வி. சங்கவி தேவதாசன்	$200.00
9	திரு. வில்சன் பிலிப்	$200.00
10	திருமதி. செல்வதி விஜயன்	$200.00
11	திருமதி. அகல்மதி ரஞ்சன்	$200.00
12	திரு. தம்பிராஜா ஜெயசீலன்	$200.00
13	திரு. வல்லிபுரம் ஆனந்தலிங்கம்	$200.00
14	திரு. குருசாமி சிவசோதி	$200.00
15	திரு. சிற்றம்பலம் சிவஞானசேகரம்	$120.00
16	திரு. சண்முகானந்தன் சுகேந்திரன்	$120.00
17	திருமதி. மோகனா விஜயரஞ்சன்	$120.00
18	திரு. தனபாலசிங்கம் மணிமாறன்	$120.00
19	திரு. சேகரம் சுஜீவன்	$120.00
20	திரு. சேகரம் சுதர்சன்	$120.00
21	திரு. அழகரட்ணம் ஜெயபாலன்	$120.00
22	திரு. சாமிநாதர் அழகரட்ணம்	$120.00
23	திரு. முருகையா உமாகாந்	$120.00
24	திருமதி. சித்திரா கிருஸ்ணசோதி	$120.00
25	திரு. சிவசோதி சிவமுருகன்	$120.00
26	திரு. சுந்தரலிங்கம் சிறீதர்	$120.00
27	திரு. வையாபுரி வேலழகன்	$120.00
28	திரு. வேதநாயகம் அன்ரன்ஜோர்ஜ்	$120.00
29	திருமதி. தேவி குமாரசாமி	$120.00
30	செல்வன். பிரசாந்தன் இரத்தினசிங்கம்	$120.00
31	திரு. இரட்ணசிங்கம் நந்தகுமார்	$120.00
32	திரு. குருகுலசிங்கம் சுசீந்திரன்	$100.00
33	திரு. துரைசாமி விஜயரட்ணம் (ரவி)	$100.00
34	திரு. செல்வம் கார்திகேசு	$100.00
35	திரு. மாறன் சிங்கம்	$100.00
36	திரு. பிரதீசன் செல்வரட்ணம்	$75.00
37	திருமதி. சோமேஸ்வரி குமாரசாமி	$50.00
38	திரு. பங்கராஜா புனிதரஞ்சன்	$50.00
39	திரு. வல்லிபுரம் கனகரட்னம்	$50.00
	மொத்தம்	$5,565.00


No One Beat Us!
On high with your thoughts
உங்கள் எண்ணங்களோடு உயரத்தில்
PRO MAR
Awards & Promotions Ltd.
www.promarawards.com
One stop for all your promotional Ideas...
Trophies
Cop.Awards
Plaques, Medals
Laser Engraving
Sand carving
Screen Printing
416-291 2344
Fax: 416-291 1231
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

எமது சங்கத்தால் இந்த வருடம் அனுப்பிய பணத்தினை பெற்றுக்கொண்ட தாயகத்தில் நலிவுற்றுக் கொண்டிருக்கும் முன்னாள் மயிலிட்டி வாழ் மக்களின் விபரங்கள்

இந்தவருடம் எமது தொழில்முயற்சித் திட்டத்தில் உதவிபெற்ற எமது உறவுகளின் பெயர் விபரங்களை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறோம்.

முதற்கட்ட உதவி - ஆடி 2011

இல.	பெயர்	அடையாள அட்டை இலக்கம்	வழங்கிய உபகரணமும் பெறுமதியும்
1	ந. மங்கலேஸ்வரி	2108351	வலை - ரூபா 21,000.00
2	த. புவனேஸ்வரி	425980360V	வலை - ரூபா 21,000.00
3	செ. செல்வவேலாயுதப	420260075V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
4	சூ. அன்புக்கரசி	1757392	வலை - ரூபா 21,000.00
5	இ. ஜெயவதனா	706001999V	வலை - ரூபா 21,000.00
6	தே. பாலாமணி	900373066V	சைக்கிள் - ரூபா 12,800.00
7	தி. பவானந்தம்	572383.91V	பெணகளுக்கான சைக்கிள் - ரூபா 13,500.00
8	தே. சூசைகாந்தி	772684894V	பெணகளுககான சைககிள் - ரூபா 13,500.00
9	மே. இந்திராகாந்தி	735164015V	பெணகளுககான சைககிள் - ரூபா 13,500.00
10	வே. கருணாவதி	766414109V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
11	கோ. கமலநிதி	736283590V	கோழிக்கூடு - ரூபா 20,000.00

இரண்டாம்கட்ட உதவி - கார்த்திகை 2011

இல.	பெயர்	அடையாள அட்டை இலக்கம்	வழங்கிய உபகரணமும் பெறுமதியும்
1	செ. தமிழினி	776303348V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
2	சு. அன்னமலர்	667171458V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
3	செ. நவரத்தினயு	582874220V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
4	செ. இந்திராதேவி	688363900V	கோழிககூடு - ரூபா 20,000.00
5	ஜெ. கருணாவதி	586782673V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
6	ஸ்ரீ. விஜிதா	828124170V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
7	அ. மேரிஸ்டெலோ ரூ	666643283V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
8	த. அன்ரனிராஜா	720903857V	கோழிக்கூடு - ரூபா 20,000 00
9	சி. ஜெயந்தி	677313560V	கோழிக்கூடு - ரூபா 20,000.00
10	ஆ. துவாரகா		தையல் மெசின் - ரூபா 20,000.00

தொழில் செய்ய இயலாதவர்களில் ஏழு பேருக்கு தலா 10,000.00 ரூபாய்கள் தபாலகத்தில் வைப்பிலிடப்பட்டு மாதா மாதம் ரூபா 2000.00 வழங்கும் திட்டத்தில் பயன்பெற்றனர்.

இல.	பெயர்	அடையாள அட்டை இலக்கம்	வழங்கிய தொகை
1	இ. நகுலேஸ்வரி	616484435V	ரூபா 10,000.00
2	பா. இராசநந்தினி	686341224V	ரூபா 10,000.00
3	செ. நாகேந்திரம்	626834035V	ரூபா 10,000.00
4	மு. சரோசாதேவி	606712103V	ரூபா 10,000.00
5	ஆ. சந்திரா	575033563V	ரூபா 10,000.00
6	பொ. செல்லையா	481970385V	ரூபா 10,000.00
7	பா. பரமகந்தன்	0906	ரூபா 10,000.00

ஆனி 15, 1990
எமது வாழ்வை அழித்த கரிநாள்

வாழ்நாள் முழுதும் மயிலிட்டி மக்களால் மறக்கமுடியாத கரிநாள் 1990 ஆம் ஆண்டு, ஆனி மாதம் 15 திகதி வெள்ளிக்கிழமை. அன்றுதான் பரம்பரை பரம்பரையாகவும், வாழையடி வாழையாகவும் நாம் வாழ்ந்த எம்மண்ணை விட்டு சில கொடூர நிமிடங்களில் நாமெல்லோரும் வேரோடு புடுங்கியெறியப்பட்டோம். அன்று எமக்கு இழைக்கப்பட்ட அந்த அநீதியை இன்று நினைத்தாலும் நெஞ்சு வெடிக்கிறது. எம்மண்ணில் வாழ்ந்த காலம் வரை எங்களை எம்மண்ணிலோ அல்லது வேறெங்குமோ எவனும் அடக்கி ஆண்டதாக சரித்திரமில்லை. ஆனால் அன்று நடந்த அநியாயம் எம்மவரின் சக்திக்கப்பாற்பட்ட கொடுங்கோன்மை அரசால் நிகழ்தப்பட்டது. பாவம் எம்முயிரைக் காக்க ஓடுவதைத் தவிர என்னதான் செய்யமுடியும் எங்களால். ஓடினோம், உடுத்த உடையுடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடினோம். அன்று தொடங்கிய நெடிய ஓட்டத்தை இன்றுவரை திசைதெரியாமல் ஓடிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் நாம் போய்ச்சேர வேண்டிய இடம்தான் இன்னும் வந்து சேரவில்லை.

அன்று நடந்ததை இப்போது நினைக்கிறேன். அன்றைய நாளும் வழமைபோல் அமைதியாகவே விடிந்தது. அதிகாலை ஐந்தரை மணிக்கு காணிக்கை மாதா கோவிலின் திருந்தாதி எங்களைத் துயிலெழுப்பியது. காலைக்கடன்களை முடித்துவிட்டு சுடச்சுட ஊர்க்கோப்பியை அருந்திக் கொண்டிருந்தபோது பக்கத்து வழியால் சந்தைக்குச் சென்றுகொண்டிருந்த மீன் வியாபாரிகளில் ஒருவர் தனது கணீர்க் குரலில் ''தேவன் கோயில் மணியோசை, நல்ல செய்திகள் சொல்லும் மணியோசை'' எனும் கிறிஸ்தவ மதப் பக்திப் பாடலை அனுபவித்துப் பாடிக்கொண்டு சென்றார். ஆகா என்ன அருமையான குரல்வளம் அம்மனிதருக்கு. சுவைமிகுந்த கோப்பியையும், தெவிட்டாத தெய்வ கானத்தையும் பருகிவிட்டு, எனது நாளாந்தச் செயற்பாடுகளில் ஒன்றான மயிலிட்டிச் சந்தையின் அன்றைய நிலவரத்தினை அறிந்துவரக் கிளம்பினேன்.

எமது சந்தையானது ஒருகாலத்தில் யாழ்மாவட்டத்தில் பிடிக்கப்படும் கடலுணவுகளில் மூன்றிலொரு பங்கினையும், எமது கிராமத்தில் விளையும் பெருமளவான மரக்கறி, தானிய வகைகளையும், மற்றும் ஏனைய பொருட்களையும் சந்தைப்படுத்தும் ஓர் இடமாகவிருந்தது. காலை ஆறு மணியளவில் தொடங்கும் சந்தை மதியம் பதினொரு மணிவரை நடைபெறும். அந்த ஐந்து மணித்தியாலங்களில் பல லட்சங்கள் பெறுமதியான வியாபாரம் நடைபெறுவது வழமை. ஆனால் 1980 களின் கடைசியில் அங்கு நடைபெறும் வியாபாரம் வெகுவாகக் குறைவடைந்திருந்தது. அதற்கான காரணங்கள் எம்மக்கள் மீது திணிக்கப்பட்ட கடல்வலயத் தடுப்புச்சட்டம் மற்றும் எமது கிராம இளைஞர்களின் இடப்பெயர்வு என்பவையே. அவ்வாறு சந்தையில் நடைபெறும் வியாபாரம் குறைந்திருந்தாலும், அதன் சுறுசுறுப்பு அன்றும் குறைந்திருக்கவில்லை.

சந்தையிலிருந்து வீட்டுக்குத் திரும்பியவுடன் வழமைபோல் பாடசாலைக்குச் சென்றேன். கடந்த சில வருடங்களாக எமது பாடசாலையும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சில மாற்றங்களைக் கண்டிருந்தது. முதலாவது பாடசாலையின் மாணவர் தொகையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. காரணம் போரின் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மயிலிட்டி வடக்கைச் சேர்ந்த பல மாணவர்கள் மீண்டும் எமது கிராமத்திற்குத் திரும்பிவரவில்லை. இரண்டாவது எமது பாடசாலைக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. மூன்றாவது மாணவர்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய ஓர் நீர்த்தாங்கியும் அமைக்கப்பட்டிருந்தது.

அன்றும் வழமைபோல் வகுப்புக்கள் நடைபெற்று மதியம் 2:30 மணிக்கு பாடசாலை முடிவுற்றது. பள்ளிக்கூடத்திலிருந்து வீடு சென்று மதிய உணவினை உண்ட பின்னர் மீண்டும் 3:30 க்கு பாடசாலைக்குச் சென்றேன். காரணம் சிறிது நாட்களின் பின்னர் நடைபெறவிருந்த காங்கேசன்துறைக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளுக்காக எங்களைத் தயார்ப்படுத்த வேண்டியிருந்தது.

இவ்வாறு மாணவர்களாகிய நாம் பாடசாலையிலும், மற்றையவர்கள் தமது அன்றாட அலுவல்களிலும் மூழ்கியிருந்தோம். அன்றைய தினம் வீரமாணிக்கதேவன்துறையில் முனையன் வளவு முருகையன் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் முருக பக்தர்கள் ஆலயத் திருப்பணிகளிலும், முருக வழிபாட்டிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆனாலும் எல்லோருடைய மனதிலும் ஒருவிதமான அச்சம் குடிகொண்டிருந்தது. காரணம் 1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கடந்த 6 மாத காலமாக நாங்கள் அனுபவித்துக் கொண்டிருந்த ஓரளவு அமைதியான வாழ்வு மட்டக்கிளப்பில் ஏற்கனவே தொடங்கியிருந்த யுத்தத்தினால் குலைக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம். எமது ஊரில் இடம்பெற்றுக் கொண்டிருந்த சில சம்பவங்களும் யுத்தம் எந்த நிமிடமும் தொடங்கலாமென்ற அறிகுறிகளையே எமக்கு வழங்கியது. எமது கிராமத்தின் இராணுவ முகாமைச் சுற்றி பதுங்கு குழிகளும், பாதுகாப்பு அரண்களும் துரித கதியில் இரவு, பகலாக அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வழமைபோல் எமது கிராமத்தின் ஆண்கள் பலர் அப்பாதுகாப்புப் பொறிமுறைகளை அமைப்பதற்கு உதவி செய்துகொண்டிருந்தார்கள். அன்றைய தினம் வெள்ளிக்கிழமை என்பதாலும், எந்நேரத்திலும் சண்டை வெடிக்கலாமென்ற அச்சத்தினாலும் மீனவர்கள் எவரும் மீன்பிடிக்கச் செல்லவில்லை. இவ்வாறு எல்லோரும் ஒருவித அச்ச உணர்வுடனே இருந்தோம். ஆனாலும் எல்லோரிடமும் ஒருவிதமான அசட்டு நம்பிக்கையுடன் கூடிய நப்பாசையொன்று இருந்தது. நாமெல்லோரும் எமது கிராமத்தில் யுத்தம் ஒருபோதும் நடைபெறாதென்றும், ஏற்கனவே மட்டக்களப்பில் ஆரம்பித்த மோதல் சமாதான வழியில் தீர்க்கப்பட்டுவிடுமென்றும் நம்பினோம்.

ஆனால் சுமார் 5:30 மணி அளவில் எமது அந்த நம்பிக்கையில் இடி விழுந்தது. தொடக்கத்தில் ஒரேயொரு வெடிச்சத்தம். பின்பு சிறிய அமைதி. நாமும் முதலில் கேட்ட வெடிச்சத்தம் ஏதோ தவறுதலாக இடம்பெற்றிருக்கக்கூடும் என்றெண்ணிவிட்டு எமது பயிற்சிகளைத் தொடர்ந்தோம். ஆனால் சில நிமிடங்களில் மீண்டும் பல வெடியோசைகள் கேட்கத் தொடங்கின. அத்துடன் பலாலி விமான நிலையத்திலிருந்து உலங்குவானூர்தி ஒன்றும் மேலெழுந்து சுடத்தொடங்கியது. அப்போது பாடசலை மைதானத்திலிருந்து எல்லோரும் சிதறி ஓடத்தொடங்கினோம். அவ்வாறே எமது மக்களிற் பலரும் செய்வதறியாது கிழக்கும், மேற்குமாக ஓடத்தொடங்கினர். சிலர் அச்சத்தால் உறைந்துபோய் பாதுகாப்பான இடங்களுக்குள் முடங்கினர். அவ்வாறு பாதுகாப்புத் தேடிய குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் உட்பட 8 அப்பாவி உயிர்கள் அன்றைய யுத்தத்தில் அநியாயமாகப் பலியெடுக்கப்பட்டன.

வேரோடி, விழுதோடி பல ஆயிரம் ஆண்டுகளாக நாம் வாழ்ந்து, வீழ்ந்த எம் தாய்மண்ணை விட்டு வெறும் சில நிமிடங்களில் உடுத்த உடையுடன் நாம் எல்லோரும் துரத்தப்பட்டோம். ஆண்டாண்டு காலமாக நாம் ஆண்டு அனுபவித்த எமதருமைத் தாய்மண்ணிலிருந்து நாமெல்லோரும் வேரோடு புடுங்கியெறியப்பட்டு இன்று 21 கொடும் வருடங்கள் கடந்தோடிவிட்டன. அந்த ஆனி மாதத்தின் கொடிய நாள் எமது வாழ்க்கையில் என்றுமே அழிக்க முடியாத ஒரு கறுப்புப் பக்கத்தையே எழுதிவிட்டது.

துயர் பகிர்வு
ச.சண்முகராசா (சசி)

மூன்று இடங்களில் சேவை

AGR
FINANCIAL SERVICES

Since 1995

உலகளாவிய பணமாற்று சேவை

இலங்கையில்

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெல்லியடி, சாவகச்சேரி, மீசாலை, சிலாபம், வவுனியா, புத்தளம், நீர்கொழும்பு, கொழும்பு, (வத்தளை முதல் மொரட்டுவ வரை)

இந்தியாவில்

சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை காரைக்குடி, நாமக்கல், நாகர்கோவில், நாகபட்டினம், சிதம்பரம், வேலூர், சிவகாசி பெங்களூர் உட்பட தமிழ் நாடெங்கும்

தூரகிழக்கில்

சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, டுபாய்

ஐரோப்பாவில்

லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ்,



உயர்ந்த பெறுமதியில் உரியவர் கையில் கொண்டு சென்று கொடுப்பதில் முதன்மையானவர்கள்

14 Years in Customer's Satisfaction

வெளிநாட்டு நாணயங்கள் (US, EURO, POUNDS) **வாங்கலாம் விற்கலாம்**

14 வது வருட நிறைவையொட்டி விசேட கூப்பன்கள் AGRஐ தொடர்புகொள்க


- இலங்கையில் எப்பாகத்தில் உள்ள வங்கிகளிலும் பணவைப்பு செய்யலாம்
- இலங்கையில் எப்பாகத்திலிருந்தும் கனடாவிற்கு பணம் எடுக்கலாம்
- கனடாவின் எந்தமாகாணத்திலிருந்தும் வீட்டிலிருந்தவாறே E-MAIL TRANSFER மூலம் பணம் அனுப்பலாம்.

Interac

Tel: 416-261-0024

Fax: 416-261-8913

Email: info@agrcanada.com www.agrcanada.com



2637 Eglinton Ave E, Scarborough, ON. M1K 2S2	1145 Morningside Ave, Unit #5, Scarborough, ON M1B 0A7	5005 Steeles Ave East, Scarborough, ON. M1V 5K1



மனதில் நீங்காத நேரங்கள்

வாழ்க நலமுடன்

மனிதர்களின் வேலைகள் எத்தகையதாக இருந்தாலும் பெரும்பாலும் அதிகநேரம் செலவிடுவது பணியிடங்கள் அல்லது அதோடு தொடர்புடைய விடயங்களுக்குத்தான். மனைவி மற்றும் குழந்தைகளுடன் நேரத்தை செலவிடுவது குறைவுதான். மனிதன் வாழ்க்கையில் மற்றவர்களோடு கொண்டுள்ள உறவுமுறை (RELATIONSHIP) மிகமுக்கியமானது. இதை வைத்துத்தான் ஒருவரைப்பற்றிய கணிப்பீடு அல்லது மதிப்பீடு செய்யப்படுகின்றது

குறிப்பாக பணியிடங்கள் மற்றும் அலுவலகங்களில் எப்போதும் ஒரு புன்முறுவல் முகத்தில் இருப்பது அவசியமாகிறது. மேற்கத்திய நாடுகளில் இயல்பாகவோ அல்லது போலியானதாகவோ பொதுவாக இந்தப்பண்பு இருக்கிறது.

நம்முடைய நாடுகளில் இத்தகைய தன்மையை காண்பது அரிது. அலுவலகங்கள், வங்கிகள், மருத்துவமனைகள், அல்லது அதிகாரிகள் முதல் அரசியல்வாதிகள்வரை, எல்லோருடைய முகத்திலும் ஏதோ ஒரு இறுக்கத்தோடுதான் இருப்பார்கள். ஏதாவது கேட்டால் எரிந்து விழுவார்கள். மரியாதையின்றி பேசுவார்கள்.

இந்த நிலை ஏன் இன்னும் மாறவில்லை என்பது வருத்தத்திற்குரியது. இதற்கு யார் காரணம் என்று அடிப்படையில் பார்த்தால் பாடசாலைகளும், ஆசிரியர்களும் தான் பொறுப்பு. பாடத்திட்டங்களைப் போதிக்கின்ற, குறைகளை கண்டுபிடிக்கின்ற, தண்டிக்கின்ற இயந்திர மனிதர்களாகத்தான் இருக்கிறார்கள்.

புன்முறுவலோடு, முகமலர்ச்சியோடு, இலகுவானமுறையில் பாடங்களைப் போதிக்கின்ற, வாழ்க்கைத் தத்துவங்களை சொல்லித்தருகின்ற, உறவுமுறைகளை கற்றுத்தருகின்ற, மனித மதிப்பீடுகளையும், மனிதநேயத்தையும் கற்றுத்தருகின்ற ஆசிரியர்களைக் காண்பது அரிது என்றே சொல்லலாம். சில ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மீது இன்னமும் நமக்கு மிகுந்த மதிப்பும், மரியாதையும் இருப்பதற்கு அவர்களின் உறவுமுறைதான் காரணம். சிலர் கொஞ்சம் தெரிந்தாலே தாங்கள்தான் வல்லுனர்கள் என்றும், தங்களுக்குத்தான் எல்லாம் தெரியும் என்றும் மற்றவர்களை மட்டம்தட்டிக் கொண்டிருப்பார்கள். இது ஒரு மனவழுத்தநோய். அவர்களின் தாழ்வு மனப்பான்மையின் வெளிப்பாடு, பொறாமையின் இன்னொரு வடிவம். இப்படிப்பட்டவர்கள் தங்கள் மாணவர்கள் தங்களைவிட படிப்பிலும், மதிப்பிலும், பணியிலும் உயர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களைப் பாராட்ட மாட்டார்கள். எப்போதும் மற்றவர்களிடம் குறைகண்டுபிடிக்கின்ற மனப்பான்மை ஒருவிதமான நோய். இப்படிப்பட்டவர்களிடம் ஏராளமான குறைகள் இருக்கும். அதன் வெளிப்பாடுதான் இத்தகைய மனநிலை. பைபிளில் சொல்லப்படுவது போல "உன்கண்ணிலுள்ள துரும்பை எடுத்துவிட்டு பிறகு மற்றவர்களின் கண்ணிலுள்ள துரும்பை எடுக்கலாம்".

அண்மையில் என்னிடம் பேசிய ஒருவர் சொன்னார் தனக்குத் தெரிந்த ஒருவர் இருக்கிறார் அவர் மேடைகளில் பேசும்போது எப்போதும் எழுதிவைத்து வாசிக்கும் பழக்கமாக உடையவர். அப்படி வாசிக்கும் போதும் தட்டுத்தடுமாறி வாசிப்பாராம். அனால் மற்றவர்கள் பேசும்போது அதில் குறைகளை கண்டுபிடித்து மட்டம்தட்டி பேசுவாராம் என்று வருத்தப்பட்டுச் சொன்னார். ஆம் இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல நண்பர்கள் இருக்கமாட்டார்கள். இவர்கள் எதையும் எதிர்மறையாக சிந்திப்பவர்கள். இவர்களுக்கு உறவு முறைகளில் (RELATIONSHIP) எப்போதும் பிரச்சனை இருக்கும்

மாறாக பல ஆசிரியர்கள், பேராசிரியர்கள் மாணவர்களுடன் நல்ல உறவு முறையை பேணுவார்கள். அப்படிப்பட்டவர்களிடம் படித்த மாணவர்கள் எந்தப்பெரிய பணிகளில், பதவிகளில் இருந்தாலும் ஆசிரியர்களின் காலைத்தொட்டு வணங்குவார்கள். அப்படி எனக்கும் ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் உள்ள உறவு இன்றும் என்னை மெய்சிலிர்க்க வைக்கும். நானும் சில காலம் பேராசிரியராக ஒரு மருத்துவக்கல்லூரியில் பணியாற்றிய அனுபவம் உண்டு என்பதால் இதை எழுத முடிகிறது.

மற்றவர்களை சந்திக்கும் போதும், குறிப்பாக பொதுவிடங்களில், பணியிடங்களில் சந்திக்கும்போது கொஞ்சம் புன்முறுவல் செய்துபாருங்கள். தெரிந்தவர்களே பலர் சிலரைக்காணும் போது முகத்தை விறைப்பாக வைத்து ஏதோ எதிரியைப் பார்ப்பதுபோல பார்ப்பவர்கள் பலர் உண்டு. குறிப்பாக ஒரு தமிழன் இன்னொரு தமிழனைச் சந்திக்கும் போதுதான் இந்த நிலை

ஏன் இந்தப் பெருமை இரண்டு பேரும் தமிழர்கள், இருவரும் சந்திக்கும்போது ஆங்கிலத்தில் அதுவும் அரைகுறை ஆங்கிலத்தில் பேசுவதில் என்ன பெருமை இருக்கிறது. நமது மொழி அழகான இனியமொழி அதில் உரையாடுவதில் என்ன தவறு. குறிப்பாக மலையாளிகள், இந்தி மொழி இருந்தாலும் தங்கள் சொந்த மொழியில்தான் பேசி உறவாடுகிறார்கள். புதிதாக முதன்முறை சந்தித்துக் கொண்டாலும் ஏதோ பல நாட்கள் பழகிய நண்பர்கள் போலக் கதைப்பார்கள். சீனர்களும் அப்படித்தான்.

ஒரு தமிழ் விழாவிற்கு சென்றிருந்தேன். பேச்சாளர்கள் மேடையில் பேசும்போது நன்றாக அழகிய தமிழில் பேசி அசத்தினார்கள். ஆனால் தங்களுக்குள் ஒருவர் இன்னொருவரிடம் பேசும்போது ஆங்கிலத்தில் பேசி தங்கள் புலமையை காட்டத்தவறவில்லை. ஏன் இந்த போலி வேடம் என்று விளங்கவில்லை. மனித உறவுகளில் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்பன மிகமுக்கியமானவை. இவற்றின் மூலம் மனித உறவுகள் மேம்பட, வளம்பெற, கடமையாற்ற வேண்டிய கடப்பாடு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. பணியிடத்திலும், குடும்பத்திலும் உறவுமுறை மிகவும் முக்கியமானது. வாழ்க்கையின் அதிக தருணங்களை இந்த இரண்டு இடங்களிலும் தான் செலவு செய்கிறீர்கள். இந்த இரண்டு இடங்களிலும் தான் அதிக பிரச்சனைகளை பெரும்பாலும் மேற்கொள்கிறோம். ஏன் என்று எண்ணிப்பார்க்கிறபோது இது வேலை, அது வாழ்க்கை என்று பிரித்துப்பார்க்கிறீர்கள். அப்படி ஒரு கலாச்சாரம் தான் வாழ்ந்து பழகிவிட்டோம். வேலையும், குடும்பவாழ்க்கையும் நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல உள்ளது.

குடும்பத்துடன் தொடர்புடைய விடயங்கள் வாழ்க்கை என்று, ஆம்! அதனால் தான் "குடும்ப வாழ்க்கை" என்று அழைக்கிறோம். வேலையை பணம் சம்பாதிக்கும் இடம் என்றும் குடும்பத்தை வாழ்வதற்கான இடம் என்றும் பிரித்துப் பார்க்கிறோம். அப்படியல்ல எல்லாமேதான் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்கள். உங்கள் தேவைகளைப் பொறுத்து உங்கள் நேரங்களை பல இடங்களில் செலவு செய்கிறீர்கள்.


அப்போது அந்த இடம், அந்தக்கணம், அதுதான் உங்கள் வாழ்க்கை. நிகழ்காலத்தில் நிஜமாய்வாழ்தலே, விழிப்புணர்வோடு வாழ்தலே முழுமையான வாழ்வு. எல்லா இடங்களிலும் முழுவிருப்பத்தோடும், முழுஈடுபாட்டோடு செய்கிறபோது, இருக்கிறபோது துன்பமில்லை, வெறுப்பில்லை. உங்களுடனான மனித உறவுமுறைகள் எப்போதும் நன்றாக இருக்க வேண்டுமென்றால் அடுத்தவர் எப்படி நடக்கவேண்டும் என்று பார்க்காதீர்கள். உங்களை எப்படி நடத்திக் கொள்ளவேண்டும் அல்லது நீங்கள் எப்படி நடந்து கொள்கிறீர்கள் என்பதை பாருங்கள். அப்போது உங்களை யாரும் வெறுக்க முடியாது.

ஆக்கம் டாக்டர் போல் ஜோசப்

குளிர்கால ஒன்றுகூடல் நிகழ்வின் மறக்கமுடியாத சில கணங்கள்









மனமார்ந்த நன்றிகள்

இம் மலரை அழகுற அச்சிட்டுத்தந்த பரடைஸ் அச்சகத்திற்கும், சங்கத்தின் நிகழ்வுகளை கணனியில் பொறித்து வெளியுலகத்துக்கு எம்மை அறிமுகப்படுத்தும் செல்வன். பிரசாந்தன் அவர்களுக்கும் காணொளியில் எம் நிகழ்வுகளை பதிவு செய்த திரு. ரவி அவர்களுக்கும், விளம்பரங்களால் எம் மலரை அழகுபடுத்தி உதவிய வியாபாரப்பெருமக்களுக்கும், இம் மலரில் தம் ஆக்கங்களை படைத்த படைப்பாளிகளுக்கும், வாழ்த்துச் செய்திகள் தந்த வள்ளல்களுக்கும், நிகழ்ச்சிகளை மேடையேற்றி சிறப்பித்த கலைஞர்களுக்கும் அதிலும் குறிப்பாக சின்னஞ் சிறார்களுக்கும், ஒன்று கூடலுக்கான மேடை மற்றும் சோடனைகளை செய்து தயார்படுத்தித் தந்த வர்களுக்கும் ஒன்று கூடலுக்கு வந்த அனைவருக்கும் வயிராற உணவு படைத்த சோழா உணவகத்திற்கும் ஒன்றியம் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது.